கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.

முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

2026ம் வருடம் மார்ச் மாதம் 07ம் நாள் சனிக்கிழமை

இடைநிலை மனு எண்.47/2025

இன்

அசல் வழக்கு எண்.532/2009

----

வெங்கிட்டம்மாள் (இறப்பு) ... 2ம் வாதி

1) இராமசாமி
2) சுந்தரமூர்த்தி
3) சுப்புலெட்சுமி
4) சீனிவாசன்
5) ராஜேஸ்வரி
6) மணிகண்டன் ... 1 முதல் 6 மனுதாரர்கள்/ 1, 3 முதல் 6 வாதிகள்

/எதிர்/

ராமைய்யா (இறப்பு) .. 4ம் பிரதிவாதி

1) லெட்சுமியம்மாள் (இறப்பு)
2) லெட்சுமி
3) செல்வம்
4) மாவட்ட பதிவாளர், மதுரை
5) சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம்,
திருமங்கலம்.

6) இருளாயி
7) கண்ணன்
8) நல்லதம்பி
9) மஞ்சுளா ... 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள்/ 1, 3, 5 முதல் 10 பிரதிவாதிகள்

இறுதியாக இம்மனுவானது 27.02.2026ல் இந்நீதிமன்றத்தில் விசாரணைக்காக வந்த போது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.நமசிவாயம் அவர்கள் ஆஜராகியும், 2, 3 மற்றும் 6 முதல் 9 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.S.கோகுலகண்ணன் அவர்கள் ஆஜராகியும், 4, 5 எதிர்மனுதாரர்கள் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், 1ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்ட நிலையில், இருதரப்பு வாதுரைகளுக்கு போதிய வாய்ப்பளித்தும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

## உத்தரவு

இம்மனுவானது மனுதாரர்கள்/வாதிகளால் அசல் வழக்கின் வழக்குரையில் திருத்தம் செய்ய வேண்டி கட்டளை 6 விதி 17ன் மற்றும் பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. மனுவின் சுருக்கம்:–</u>**

1.1) மனுதாரர்கள்/வாதிகளால் அசல் வழக்கின் வழக்குரையில் திருத்தம் செய்ய வேண்டும் என்று இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்து இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

**3<u>) தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதேயாகும்.</u>**

இருதரப்பு வாதுரைக்கும் போதிய வாய்ப்பளிக்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

3.1) வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில், வழக்கு சொத்தானது, மனுதாரர்கள்/வாதிகளால் 11.09.1974, 19.01.1983 ஆகிய தேதிகளில் கிரையம் பெறப்பட்ட சொத்தாகும் என்றும், எனினும் 1, 2 வாதிகள் கிரையம் பெற்ற சொத்துக்கள் மொத்தமாக 1 ஏக்கர் 42 செண்ட் என்று குறிப்பிட்டு வழக்கு சொத்து விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் வழக்கு விசாரணையில் எவ்வித குழப்பமும் ஏற்படாமல் இருக்கும்விதமாக மேற்படி 1, 2 வாதிகளின் கிரைய சொத்துக்களை

பொறுத்து தனித்தனியாக பிரித்து காட்டுவது சட்டப்படியானது என்றும், எனவே இந்த சீர்திருத்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று வாதிகள் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது.

3.2) மாறாக, பிரதிவாதிகள் தரப்பில் அசல் வழக்கானது கடந்த 2009 முதல் நிலுவையில் இருந்து வருவதாகவும், அசல் வழக்கானது வாதிகள் தரப்பு கூடுதல் சாட்சிகள் விசாரணைக்கு நிலுவையில் இருந்து வரும் நிலையில், இந்த சீர்திருத்த மனுவானது நீதிமன்ற கால நேரத்தை வீரயம் செய்யும்விதமாகவும், அசல் வழக்கு விசாரணையை காலம் கடத்தும்விதமாகவும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இம்மனுவில் குறிப்பிட்டுள்ள 3, 4 சீர்திருத்த விவரங்களை பொறுத்து மனுதாரர் தரப்பில் IA No.446/2022 தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனுவை மேல்நடத்தவில்லை என்று மனுதாரர் தரப்பில் கூறியதன் அடிப்படையில் மேற்படி IA No.446/22 மனுவானது கடந்த 06.08.2025ம் தேதி தள்ளுபடி செய்து உத்திரவிடப்பட்டுள்ளது. இந்நிலையில், அதே சீர்திருத்தங்களை கொண்டு இம்மனு சட்டத்திற்கு முன் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

3.3) 3வது சீர்திருத்த விவரத்தில் 1வது இலக்க சொத்திற்கு அடுத்து 2, 3 இலக்க சொத்துக்களை சேர்க்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி 2, 3 இலக்க சொத்துக்கள் என்பது 1வது இலக்க சொத்தே ஆகும். அதன்படி 1வது இலக்க சொத்தில் உள்ள 1 ஏக்கர் 72 செண்டில் 2வது இலக்க சொத்தாக 27 செண்டும், 3வது இலக்க சொத்தான 1 ஏக்கர் 47 செண்டும் உள்ளதாக காணப்பட்டுள்ளது. மேற்படி சொத்து விவரமானது 2 முறை சட்டத்திற்கு முரணாக குறிப்பிடப்பட்டுள்ளது. 1வது இலக்க சொத்தேயே 2, 3 இலக்க சொத்துக்களாக சேர்க்க வேண்டி மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த சீர்திருத்த மனுவானது சட்டப்படியானதாக காணப்படவில்லை. மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள 1. 2 சீர்திருத்த விவரத்தை பொறுத்து மனுதாரர் மனுவில் எவ்விதமான சட்டப்படியான காரணமோ, விளக்கமோ எடுத்துரைக்கவில்லை.

3.4) மேலும், வாதி தரப்பு கூடுதல் சாட்சி விசாரணைக்கு அசல் வழக்கு நிலுவையில் இருந்து வரும் நிலையிலும், வா.சா.1ஐ வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்த பின்னிட்டு இம்மனுவை தாக்கல் செய்தது சட்டப்படியானது இல்லை என்றும், இம்மனுவானது அசல் வழக்கு

விசாரணையை காலம்கடத்தும்விதமாகவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் எதிர்மனுதாரர் தரப்பில் கூறிய வாதத்தை கருத்தில் கொண்டும், இம்மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,** மனுதாரர்கள்/வாதிகளின் இம்மனுவானது தள்ளுபடி செய்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த திறந்த நீதிமன்ற அவையில் 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 07ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.07 17:36:13 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி(FAC),
திருமங்கலம்.

**<u>இணைப்பு:</u>**

சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இருதரப்பிலும் தாக்கல் இல்லை.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.07 17:36:21 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி(FAC),
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.47/2025
இன்
அசல் வழக்கு எண்.532/2009
வரைவு/செவ்வை உத்தரவு
நாள் : 07.03.2026